**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**

**08.07.2022** **ம.சா.1**

**D.V.O.P 21/2018** **மனுதாரர்.லட்சுமி க/பெ.சிவசுப்பிரமணியன்**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இம்மனுவை என்னுடைய 26 பவுன் நகையை திரும்ப தரக்கோரியும், மேலும் எனக்கு ஜீவனாம்சம் தரக்கோரியும், எனது மகனின் கல்விசெலவு செய்வதற்கு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக்கோரியும் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் எனது மகன் மனுதாரர் கிடையாது என்றால் அவரும் மனுதாரர் தான். எனது மகன் கார்த்திக்கின் வயது 22. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் முடிந்ததிலிருந்து 4 மாதம் 12 நாட்கள் மட்டுமே ஒன்றாக வாழ்ந்தோம். எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்த 4 மாதம் 12 நாட்களில் கூட அவருடன் சண்டை போட்டு கோபித்துக்கொண்டு எனது தாயார் வீட்டிற்கு சென்று விடுவேன் என்றால் சரியல்ல. நான் வேறொரு நபரை திருமணம் செய்யலாம் என்று இருந்தேன் என்றும் எனது பெற்றோரின் வற்புறுத்தலால் எதிர்மனுதாரரை விருப்பமின்றி திருமணம் செய்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு திருமணத்தின் போது 16 பவுன் நகை மட்டுமே போடப்பட்டது என்றால் 30 பவுன் நகை போடப்பட்டது. எதிர்மனுதாரர் என்னிடமிருந்து 5 பவுன் நகையை மட்டுமே விவசாயம் செய்வதற்காக அடமானம் வைப்பதற்கு பெற்றார் என்றும், அதையும் என்னிடம் திரும்ப ஒப்படைத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அவர் என்னிடம் வாங்கிய எந்த நகையையும் திரும்ப தரவில்லை. எதிர்மனுதாரரும் நானும் 1999ம் வருடம் முதல் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறோம். எதிர்மனுதாரர் பழனி சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P. No.103/2011 என்ற வழக்கை என்னுடன் சேர்ந்து வாழ்வதற்காக தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்று சொன்னேன் என்றால் சரியல்ல. நான் அவருடன் சேர்ந்து வாழ்வதற்காக அவரது வீட்டிற்கு சென்று 23 நாட்கள் அங்கிருந்தேன் அவர் என்னிடம் ஒரு வெள்ளை தாளில் கையெழுத்திடுமாறு சொன்னார். என்னவென்று கேட்டதற்கு தங்கைக்கு சொத்தை கொடுத்து விடுகிறேன் என்றும் எனக்கு எதுவும் இல்லை என்றும்

சொல்லிவிட்டார். எதிர்மனுதாரர் என்னை வெற்றுதாளில் கையெழுத்து போடுமாறு சொல்லவில்லை என்றும் அவர் நான் சொல்வது போல் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பவில்லை என்று சொன்னதன் அடிப்படையில் விவாகரத்து மனு H.M.O.P. No.155/2015 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் விவாகரத்து உத்தரவிடப்பட்டது என்று சொன்னால் சரிதான். 23.11.2017 ம் தேதி ஆண்டிப்பட்டி கிராமத்தில் உள்ள 23 ஏக்கர் 74 செண்ட்டை எனது தாயார் எனது பெயருக்கு செண்டில்மெண்ட் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி பூமி விவசாயம் செய்து நான் போதிய வருமானம் ஈட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. எனது உடன் பிறந்தவர் வடிவேல். எனது சகோதரருக்கு எனது தாயார் நிலம் கொடுத்தார் என்றால் சரிதான் எவ்வளவு கொடுத்தார் என்று தெரியாது. நான் எனது மனுவில் சொல்லியுள்ளது போல் எதிர்மனுதாரருக்கு நிலமோ, கோழிபண்ணையோ அல்லது கறவை மாடுகளோ கிடையாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு 2.4 ஏக்கர் நிலம் தான் உள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் 85 வயதான தாயார் வேலாத்தாள் அவருடன் தான் உள்ளார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் தாயாரை அவர் தான் பராமரித்து வருகிறார் என்றும் அவரது மருத்துவசெலவு மற்றும் உணவு, உடை செலவு ஆகியவற்றை அவர் தான் கவனித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 23 வருடங்களாக எதிர்மனுதாரருடன் பிரிந்து வாழ்ந்துவிட்டு அவர் குடும்ப வன்முறை செய்ததாக அவர் மீது பொய்யான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பழனி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து பெற்று அவருடன் சேர்ந்து வாழாத நிலையில் அவரிடம் ஜீவனாம்சம் கேட்டு எந்த பரிகாரமும் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரின் சட்டபூர்வமான மனைவியாக இல்லாத நிலையில் நான் மனுவில் சொல்லியுள்ள பரிகாரங்களை கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் எங்களது மகனுக்கு அவருடைய சொத்தை தர முடியாது என்று சொல்லவில்லை என்றும், தன்னுடைய காலத்திற்கு பிறகு அனைத்து சொத்துக்களையும் எங்கள் மகனுக்கே தருவதாக சொன்னார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இன்று வரை வேறு திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு இருதய பிரச்சனை இருப்பது சம்பந்தமாக எனக்கு

தெரியாது. எதிர்மனுதாரருக்கு இருதய பிரச்சனை ஏற்பட்டு அதற்காக கோவை குப்புச்சாமி நாயுடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அதற்காக ரூபாய் ஆறு இலட்சத்தை கடன் வாங்கி செலவு செய்தார் என்றும், அவர் அவ்வாறு கடன் வாங்கி சிகிச்சை பெற்று தான் அவருடைய உடல்நிலையை பராமரித்து வருகிறார் என்று சொன்னால் ஊரிலேயே எதிர்மனுதாரர் குடும்பம் தான் பெரிய குடும்பம் அவருக்கு கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. எதிர்மனுதாரர் இன்று வரை தன்னுடைய உடல்நிலையை பராமரிப்பதற்காக மருத்துவமனைக்கு சென்று மருத்துவ பரிசோதனை செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் உடல்நிலை சரியாக இல்லாததால் அவரால் கடுமையான வேலை செய்ய முடியாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை விட நான் தான் வசதியாக உள்ளேன் என்றும் எதிர்மனுதாரர் தான் என்னிடம் ஜீவனாம்சம் கேட்ககூடிய நிலையில் இருக்கிறார் என்றால் சரியல்ல. சிறிது நாட்களுக்கு முன்பு பாப்பம்பட்டி அருகே தென்னந்தோப்பு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் வடிவேல் மனைவி இறந்து விட்டார் என்றும் அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். எனது அண்ணனின் மகள்களை நான் தான் பராமரித்து வருகிறேன் என்றும் அதனால் தான் எதிர்மனுதாரரை புறக்கணித்து எனது தாயார் வீட்டில் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோர் வீட்டில் இருக்கும் அளவிற்கு எதிர்மனுதாரர் வீட்டில் வசதி இல்லை என்பது தான் அவரை புறக்கணிப்பதற்கு காரணம் என்றால் சரியல்ல. என்னை பராமரிப்பதற்கு போதுமான வருமானம் உள்ளது என்றும், 20 வருடத்திற்கு மேலாக எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்வதால் குடும்ப வன்முறை ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றும், அதனால் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றும் எனவே நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2022.07.08 19:26:51 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி